தமிழ்நாடு நகர்ப்புற முன்னணி முதலீட்டுத் திட்டத்தின் மூன்றாம் கட்டமாக

# ரூ.1478.34 கோடி மதிப்பீட்டில் செயல்படுத்த நிர்வாக அனுமதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜூலை 23-

தமிழ்நாட்டில் உள்ள முக்கிய தொழில் பெருவழித்தடங்களில், முன்னுரிமை அடிப்படையில் குடிநீர் வழங்கல், கழிவுநீர் மற்றும் வடிகால் உட்கட்டமைப்புகளை மேம்படுத்துதல், புதுமையான திட்டங்களை ஊக்குவித்தல், நகர்ப்புற ஆளுகை, மாநில மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளின் திறனை மேம்படுத்துதல், சுற்றுச் சூழல் நிலைத்தன்மை, காலநிலை நெகிழ்ச்சி மற்றும் நகர்ப்புற வாழ்வாதாரத்தை மேம்படுத்துதல் ஆகிய நோக்கங்களை கொண்ட தமிழ்நாடு நகர்ப்புற முன்னணி முதலீட்டு திட்டம், ஆசிய மேம்பாட்டு வங்கி நிதி உதவியுடன் மூன்று கட்டங்களாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு நகர்ப்புற முன்னணி முதலீட்டு திட்டத்தின் இரண்டாம் கட்டத்தைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் ரூ.328.06 கோடி நிதி பங்களிப்பு மற்றும் ஆசிய மேம்பாட்டு வங்கி நிதி உதவியுடன் ரூ.1,478.34 கோடி மதிப்பீட்டில் தமிழ்நாடு நகர்ப்புற முன்னணி முதலீட்டு திட்டத்தின் மூன்றாம் கட்டத்தை செயல்படுத்த நிருவாக அனுமதி வழங்கி ஆணையிட்டுள்ளார்கள்.

தமிழ்நாடு நகர்ப்புர முன்னணி முதலீட்டு திட்டத்தின் மூன்றாம் கட்டத்தின் கீழ், கோயம்புத்தூர் மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட வடவள்ளி, வீரகேரளம், கவுண்டம்பாளையம் மற்றும் துடியலூர் ஆகிய 4 பகுதிகளில் ரூ.922.16 கோடி மதிப்பீட்டில் பாதாளச் சாக்கடைத் திட்டம், தூத்துக்குடி மாநகராட்சிக்கு ரூ.87.01 கோடி மதிப்பீட்டிலான மழைநீர் வடிகால் திட்டப்பணிகள் மற்றும் மதுரை மாநகராட்சிக்கு ரூ.370.61 கோடி மதிப்பீட்டிலான குடிநீர் வழங்கல் மேம்பாட்டு திட்டம் செயல்படுத்தப்படும். இத்திட்டத்தின் கீழ், திட்ட ஆலோசனைப் பணிகள், நிருவாக மேம்பாடு உள்ளிட்ட பணிகளும் செயல்படுத்தப்படும். மேலும், இத்திட்டத்தின் கீழ், பணிகளுக்கு ஒப்புதல் வழங்குவதற்காகவும், திட்ட நிதியை சிறப்பாக பயன்படுத்துவது மற்றும் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றுவது தொடர்பான திட்டச் செயலாக்க வழிகாட்டு நெறிமுறைகளை உருவாக்குவதற்காகவும், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் தலைமையில் குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளை உள்ளடக்கிய அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புப் பகுதிகளிலும் உயர்தரமான சாலைகள், ஆற்றல்மிகு தெருவிளக்குகள், திடக்கழிவு மேலாண்மை, பாதாளச் சாக்கடை வசதி மற்றும் மழைநீர் வடிகால் கட்டமைப்புகள் உள்ளிட்ட பொதுமக்களுக்கு தேவையான அனைத்து உட்கட்டமைப்பு வசதிகளையும் ஏற்படுத்துவதற்கு, அரசு செயல் படுத்தி வரும் பல்வேறு திட்டப் பணிகளின் மேலும் ஒரு முக்கிய பகுதியாக இத்திட்டம் அமைந்துள்ளது.

---

ரூ.9.73 கோடியில் 200 மகளிர் காவலர்கள் தங்கும் வகையில்

# சிந்தாதிரிப்பேட்டையில் பெண் காவலர்களுக்கு விடுதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

சென்னை, ஜூலை 23-

சென்னை சிந்தாதிரிப்பேட்டையில் 200 பெண் காவலர்கள் தங்கும் வகையில் மகளிர் காவலர் விடுதி அமைத்திட ரூ.9.73 கோடி ஒதுக்கீடு செய்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

சமூகத்தில் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளைக் கையாள்வதில் காவல் துறைக்கு உதவி செய்யும் முதன்மை நோக்கத்துடன் 1973ஆம் ஆண்டில் மகளிர் காவல் பிரிவு நிறுவப்பட்டது. கடந்த 50 ஆண்டுகளில் இந்தச் சூழல் மிகவும் மாறி உள்ளது. சட்டம் ஒழுங்கைப் பராமரித்தல், குற்றங்களைத் தடுத்தல் மற்றும் கண்டறிதல், போக்குவரத்தை ஒழுங்குபடுத்துதல் உள்ளிட்ட பல்வேறு முக்கிய பணிகளில் மகளிர் காவல் துறையினர் திறம்பட செயலாற்றி வருகின்றனர். மாநிலத்தில் தற்போது 222 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. ஒவ்வொரு தாலுகா காவல் நிலையத்திலும் குறைந்தது ஒரு பெண் காவல் உதவி ஆய்வாளர் மற்றும் 3 பெண் தலைமை காவலர்கள் பணியில் உள்ளனர். தமிழ்நாடு காவல் துறையில் 2023ஆம் ஆண்டு மகளிர் காவலர்களின் பொன்விழா ஆண்டை குறிக்கிறது.

தமிழ்நாடு காவல்துறையில் மகளிரின் பொன்விழா ஆண்டை முன்னிட்டு சிந்தாதிரிப்பேட்டையில் 200 பெண் காவலர்கள் தங்கும் வகையில் மகளிர் காவலர் விடுதி கட்டப்படும் என்றும், இவ்வசதி பெண் காவலர்கள் சென்னை மாநகருக்கு பணியிட மாறுதல் பெற்று வரும் போதெல்லாம், அவர்களுக்கு அரசு குடியிருப்புகள் கிடைக்கும் வரை அல்லது சொந்தமாக வாடகைக்கு தங்கும் விடுதியை ஏற்பாடு செய்யும் வரை தங்கும் இடமாக பயன்படுத்தப் படும் என்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 2023-2024ஆம் ஆண்டிற்கான காவல்துறை மானியக் கோரிக்கையின்போது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டது.

இந்த அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், சென்னை சிந்தாதிரிப்பேட்டை யில் 200 பெண் காவலர்கள் தங்கும் வகையில் மகளிர் காவலர் விடுதி அமைத்திட 9 கோடியே 73 இலட்சத்து 24 ஆயிரம் ரூபாய் வழங்குவதற்கு தற்போது நிருவாக ஒப்பளிப்பு செய்து தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

இதன்மூலம், சென்னை மாநகருக்கு பணியிட மாறுதலில் வரும் பெண் காவலர்களுக்கு இம்மகளிர் காவலர் விடுதி பேருதவியாக இருக்கும்.

---

திருநெல்வேலி மாவட்ட

# பொறுப்பு அமைச்சராக தங்கம் தென்னரசு நியமனம்!

## தமிழ்நாடு அரசு அறிவிப்பு!

சென்னை, ஜூலை 23 -

திருநெல்வேலி மாவட்ட பொறுப்பு அமைச்சராக அமைச்சர் தங்கம் தென்னரசை நியமித்து இருப்பதாக தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:-

மாவட்டங்களில் வளர்ச்சிப் பணிகளைத் துரிதப்படுத்தவும், பொதுமக்களுக்குச் சென்றடைய வேண்டிய நலத்திட்ட உதவிகளைக் கண்காணிக்கவும், பொதுமக்களிடமிருந்து பெறப்படுகின்ற மனுக்கள் மீது துரிதமாக நடவடிக்கை எடுக்கப்படுவதை உறுதி செய்யவும், பேரிடர் காலங்களில் உடனடியாக தக்க நிவாரண பணிகளை மேற்கொள்ளவும், வருவாய் மாவட்டவாரியாக அமைச்சர் பெருமக்கள் பொறுப்பு அமைச்சர்களாக நியமனம் செய்து ஏற்கெனவே ஆணையிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், இராமநாதபுரம் மாவட்டத்திற்குப் பொறுப்பு அமைச்சராக நியமனம் செய்யப்பட்டுள்ள நிதி மற்றும் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்களை அம்மாவட்டத்திற்கு பதிலாக திருநெல்வேலி மாவட்டத்திற்குப் பொறுப்பு அமைச்சராக நியமனம் செய்து உத்தரவிடப்பட்டுள்ளது.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

தாய்மையை நிர்வாணப்படுத்தி தலைகுனிய வைத்தது மணிப்பூர்! தடுக்கத் தவறிய

# ஒன்றிய அரசைக் கண்டித்து - கழக மகளிர் அணி இன்று மாபெரும் ஆர்ப்பாட்டம்!

சென்னையில் - கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமை!

“மற்ற மாவட்டங்களில் நாளை (ஜூலை 24) நடைபெறும்” என - தலைமைக் கழகம் அறிவிப்பு!



சென்னை, ஜூலை 23-

தாய்மையை நிர்வாணப்படுத்தி தலைகுனிய வைத்தது மணிப்பூர்! அதனைத் தடுக்கத் தவறிய ஒன்றிய அரசைக் கண்டித்து தி.மு.க. மகளிர் அணி சார்பில் இன்று (23.07.2023) கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் சென்னையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டம் குறித்து தலைமைக் கழகம் விடுத்த அறிவிப்பு வருமாறு:-

பா.ஜ.க. ஆட்சி நடத்தும் மணிப்பூர் மாநிலத்தில் மிகப் பெரிய கலவரம் ஏற்பட்டு பல உயிர்கள் பலியாகின. மாநிலத்தை ஆளும் பா.ஜ.க. அரசு கலவரத்தைக் கட்டுப்படுத்த தவறிய நிலையில், சமீபத்தில் பெண்கள் இருவர் நிர்வாணப்படுத்தப்பட்டு வீதியில் ஊர்வலமாக இழுத்துச் சென்று கற்பழிக்கப்பட்ட, மனிதாபிமானமற்ற கொடுமை நிகழ்ந்ததாக, ஊடகச் செய்திகள் தற்போது வெளிவந்துள்ளது. அனைவரின் உள்ளத்தையும் பதற வைத்துள்ளது. தாய்மையை அவமானப்படுத்தும் இந்நிகழ்வுகளை மணிப்பூர் மாநில பா.ஜ.க. அரசு தடுக்கத் தவறி வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது.

இக்கலவரங்கள் நிகழ்ந்த நேரத்தில் அதனைத் தடுக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் பிரதமர் மோடி வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டு வந்தார். ஒன்றிய பா.ஜ.க. அரசும் மகளிருக்கெதிரான இக்கொடுமைகளைத் தடுக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தவறியது.

மணிப்பூர் கலவரம் தொடங்கிய நேரத்திலேயே தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான தளபதி அவர்கள், தனது கண்டனத்தையும், கவலையையும் சமூக ஊடக வாயிலாக வெளிப்படுத்தினார்.

இச்சூழ்நிலையில் பெண்களுக்கு எதிரான நெஞ்சைப் பதற வைக்கும் இக்கொடுமையைக் கண்டித்து,இன்று (23.07.2023) சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே மாலை 4 மணியளவில் கழகத் துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

தொடர்ச்சியாக நாளை (24.07.2023 - திங்கட் கிழமை) காலை 10.00 மணியளவில் தமிழகம் முழுவதும் மாவட்டத் தலைநகரங்களில் மகளிர் அணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நடைபெறும். மாவட்டக் கழகச் செயலாளர்கள், மகளிர் அணி அமைப்பாளர்கள் இணைந்து இந்த ஆர்ப்பாட்டங்களை சிறப்பாக நடத்திடக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.

---

155 கோடி ரூபாய் செலவில்

# தாம்பரம் ரயில் நிலையத்தில் உட்கட்டமைப்பு வசதிகள்!

## கனிமொழி என்.வி.என். சோமு கேள்விக்கு ஒன்றிய அமைச்சர் பதில்!



புதுடெல்லி, ஜூலை 23-

சென்னையிலிருந்து தென்மாவட்டங்கள் மற்றும் டெல்டாபகுதிகளுக்கு பயணமாகும்பயணிகளுக்கு முக்கிய ரயில் நிலையமாக விளங்கும் தாம்பரம் ரயில் நிலை யத்தில் அடிப்படை கட்டமைப்பு வசதிகள் போதுமான அளவுக்கு உள்ளதா? அதை மேம்படுத்த நிதி ஒதுக்கப்பட்டுள்ளதா? என்று மாநிலங்களவையில் தி.மு.க. எம்.பி. கனிமொழி என்.வி.என். சோமு கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்கு ஒன்றிய ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் அளித்த பதில் வருமாறு:

தாம்பரம் ரயில் முனையத்தில்உட்கட்டமைப்புவசதிகளை மேம்படுத்த இரண்டு கட்டங்களாகதிட்டமிடப்பட்டு, 49 கோடி ரூபாய் மதிப்பிலானமுதற் கட்டப் பணிகள் முடிவடைந்துவிட்டன.

இரண்டாம் கட்டப் பணிகளுக்கு மேலும் 109 கோடி ரூபாய் தேவைப்படும் என்று கணக்கிடப்பட்டு, போதுமான நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் நடந்து வருகின்றன.

ரயில்வே திட்டங்களைப் பொறுத்தவரை, பொருட்கள் இடம் மாறுதல், விரிவாக்கப்பணிகளுக்கு தேவையான இடம்,அவற்றைக்கையகப் படுத்தும்போது எழும் சட்டச் சிக்கல்கள், ஓராண்டில் எவ்வளவு மாதங்கள் இடர்பாடின்றி வேலை செய்ய முடிகிறது என்பன போன்ற பல்வேறு காரணிகளை வைத்தே ஒவ்வொரு திட்டமும் எவ்வளவு விரைவாக முடிக்கப்படுகிறது என்பது நிர்ணயிக்கப்படு கிறது. தாம்பரம் ரயில் நிலைய கட்டமைப்பு மேம்பாட்டுப் பணியையும் விரைவாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு ஒன்றிய அமைச்சர் தெரிவித்தார்.



சிவகங்கை மாவட்டம். மானாமதுரையில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூபாய் 8 லட்சத்து 14ஆயிரம் மதிப்பில் கட்டப்பட்ட சைக்கிள் நிழற்குடையினை திருமதி தமிழிரசி ரவிக்குமார் தலைமையில் பள்ளி மாணவி திறந்து வைத்தார். உடன் மானாமதுரை நகர்க் கழகச் செயலாளர் க.பொன்னுச்சாமி, ஒன்றியச் செயலாளர் துரை ராஜாமணி ஆகியோர் உள்ளனர்.

---



தேனி வடக்கு மாவட்டம் தேனி கட்சி அலுவலகத்தில் மணிப்பூர் மாநிலத்தில், கலவரத்தை கட்டுப்படுத்த முடியாத பி ஜே பி ஒன்றிய அரசை கண்டித்து மகளிர் அணி சார்பாக கண்டன ஆர்ப்பாட்டம் நடத்துவது தொடர்பாக வடக்கு மாவட்டச் செயலாளர் தங்க தமிழ்ச்செல்வன் உரையாற்றிட ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. மாவட்ட அவைத் தலைவர் பி.டி.செல்ல பாண்டியன் தலைமை தாங்கினார். மாவட்ட துணை செயலாளர் கண்ணன் மாவட்ட பொருளாளர் சுரேஷ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முருகேசன், ராஜ ரமேஷ்மற்றும் நகர, ஒன்றிய பேரூர் மகளிர் அணி நிர்வாகிகள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையின் சார்பில் நடக்கும் கலைஞரின் வருமுன் காப்போம் திட்டம் சிறப்பு மருத்துவ முகாம் கிளியூர் கிராமத்தில் உள்ள அரசு உயர்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இவ்விழாவை பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ. முருகேசன் குத்து விளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். இந்நிகழ்வில் நயினார் கோவில் கிழக்கு ஒன்றிய கழகச் செயலாளர் அண்ணாமலை நயினார் கோவில் ஒன்றிய துணைச் செயலாளர் திலகர், கிளியூர் ஊராட்சி மன்ற தலைவர் ஆசாத்தம் மோதியா மற்றும் வட்டார மருத்துவ அலுவலர்கள் எஸ். முத்துக்குமார் கண்காணிப்பாளர் சேக் தாவுது கான், மேற்பார்வையாளர் நம்பிராஜன், வேல்முருகன், ராஜசேகரன் கழக முன்னோடிகள் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

---

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு!

கோவை வடக்கு மாவட்டம், காரமடை நகராட்சி 14வது வார்டு முன்னாள் செயலாளர் ஆர். ராயப்பன்,தனது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 22.7.2023

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.

---


9 ஆம் ஆண்டு நினைவு நாள்

23.7.2014



டாக்டர் து.திருமூர்த்தி
திருப்போரூர் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்

உங்கள் அன்புக்குரிய
மனைவி : டாக்டர் தி.கௌசல்யா
மகன் : தி.தினேஷ்
மகள் : தி.பிரியா


---

# சென்னையில் ஜி 20 கூட்டங்கள், நிகழ்வுகள்!

சென்னை, ஜூலை 23-

சென்னையில் ஜி20 கூட்டங்கள், நிகழ்வுகள் நடைபெறும் பகுதியில் டிரோன்கள் பறக்க காவல் துறைதடைவிதித்துள்ளது. ஜூலை 23-26 வரை டிரோன்கள் பறக்க சென்னை மாநகர காவல் துறைதடைவிதித்துள்ளது.

ஜி20 மாநாட்டு நிகழ்வுகள் மாமல்லபுரத்தில்இன்று முதல் 26ம் தேதி வரை நடைபெற உள்ளன.

ஜி20 மாநாட்டில் வெளிநாட்டு நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்து கொள்ள உள்ளதை ஒட்டி பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. சென்னையிலும் ஜி20 மாநாடு நடக்க உள்ளதால் முக்கிய பிரமுகர்கள் பயணம் செய்யும் வழித்தடங்கள் சிகப்பு மண்டலமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

---

தொ.மு.ச. பேரவைப் பொருளாளர்

# கி.நடராசன் துணைவியார் மறைவு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை. ஜூலை 23 -

தொ.மு.ச. பேரவைப் பொருளாளர் கி.நடராசன் துணைவியார் திருமதி விஜயலட்சுமி (வயது 63) அவர்கள் உடல் நலக் குறைவால் நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.

தகவல் அறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை துணைவியாரை இழந்து வாடும் தொ.மு.ச. பொருளாளர் கி.நடராசனுக்கும் அவர்தம் குடும்பத்தாருக்கும் தெரிவித்துள்ளார்.

---

# ஒழுங்கு நடவடிக்கை ரத்து!

## தலைமைக் கழக அறிவிப்பு!

கோவை வடக்கு மாவட்டம், சரவணம்பட்டி பகுதி முன்னாள் செயலாளர் மாணிக்கம் (எ) மருதாச்சலம்; 12வது வார்டு முன்னாள் செயலாளர் எஸ்.ஆர். கந்தசாமி மற்றும் 14வது வார்டு ஆர்.ஜெ. திலகவதி ஆகியோர் தங்களது செயலுக்கு வருத்தம் தெரிவித்து, மீண்டும் கழகப் பணியாற்ற அனுமதிக்குமாறு கழகத் தலைவர் அவர்களிடம் வைத்த கோரிக்கையினை ஏற்று, அவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை ரத்து செய்யப்பட்டு, இன்று முதல் கழக உறுப்பினராகச் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 600 018
நாள்- 22.7.2023

துரைமுருகன்
பொதுச் செயலாளர்
தி.மு.க.